முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,
முதன்மை சார்பு நீதிபதி

ம.சா.3 தேதி.04.10.2023

| | | | |
|---|---|---|---|
| MCOP. No. | 319/2019 | | |
| பெயர் | Mrs. Hemalatha | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

இறந்தவர் தலைமை ஆசிரியராக பணி ஓய்வு பெறக்கூடும் என்பது அனுமானத்தின் அடிப்படையில் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவர் பணி ஓய்வு பெறாமலும் இருக்கலாம் என்றால் சரிதான். பள்ளி மூடப்படலாம் என்றும் அவர் வேறு பணிக்கு பணிமாறுதலும் செய்யப்படலாம் என்றாலும் சரிதான். கூடுதல் உதவி தொடக்க கல்வி அலுவலரால் தான் சம்பளம் எவ்வளவு வழங்கப்படும் என்பதை முறையாக சொல்லமுடியும் என்றால் சரிதான். புதிய ஓய்வுதீய திட்டப்படி இறந்தவரின் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வு ஊதியம் எவ்வளவு கிடைக்கிறது என்றால் புதிய ஓய்வுதீய திட்டப்படி அவரது குடும்பத்திற்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது, எவ்வளவு என்று எனக்கு தெரியாது. பணி உயர்வு பெற்றால் ஊதிய உயர்வு கிடைக்கும் என்று அனுமானத்தின் பேரில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது சாட்சியம் அனுமானத்தின் பேரில் அமைந்துள்ளதால் அதை நீதிமன்றம் ஏற்க கூடாது என்றால் சரிதான்.

விசாரணை முடிந்தது.